தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 மே 2004

## பாரதிதாசன் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை சார்பில் நடைபெற்ற பாரதிதாசன் கருத்தரங்க நிகழ்ச்சியில் பாவேந்தரின் மொழியுணர்வும் மொழிநடையும் என்ற தலைப்பில் கோவை பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் செ. சண்முகம் பேசும்போது, தமிழ் வளர்ச்சிக்கான வழிமுறைகளை வகுத்தவர் பாரதிதாசன் எனப் புகழாரம் சூட்டினார்.



"தமிழை மேம்படுத்த வேண்டுமென்றால் தமிழன் கல்வி கற்கவேண்டும். அதிலும் கட்டாயக் கல்வி தேவை. கட்டாயத் தமிழ்க் கல்வி தேவை என்ற உணர்வு பாரதிதாசனுக்கு இருந்தது. தமிழைக் கால வளர்ச்சிக்கு ஏற்ப வளர்க்க வேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் கொண்டவர் பாரதிதாசன். எது வேண்டும். எது வேண்டாம் எனப் பட்டியலிட்டுத் தமிழ் வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் பாரதி.

எளிய நடையில் நூல் எழுதவேண்டும். புதிய தமிழுக்கான இலக்கணம் எழுத வேண்டும். துறைசார் கலைச்சொல் படைக்கவேண்டும். துறைசார் நூல்களைப் படைக்க வேண்டும். தமிழ்ப் படைப்பை வெளியிடக் கழகங்கள் வேண்டும். நூற்களை இலவசமாய்த் தர வழி வகுக்க வேண்டும் எனத் தமிழ் வளர்ச்சிக்கான வழிமுறைகளை வகுத்தார் பாரதிதாசன்.

தமிழை உடல், உயிர், உணர்வு எனப் பாவித்துக் கவிதை படைத்ததோடு, தமிழில் கல்வி, தமிழர் ஆட்சி, தமிழ் மேம்பாடு, தமிழியக்கம், தமிழ்நடை, தமிழ் உயர்வு, தமிழ்ப் பத்திரிகை, தமிழ்வழி அறிவியல் எனப் பல்வகை நிலைகளில் தமிழை உயர்த்த வேண்டும்; தமிழின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் அனைத்து முயற்சிகளையும் முளையிலேயே திருகி எறிய வேண்டும் என்பதைத் தனது படைப்புகளில் வெளிப்படுத்தினார் பாரதிதாசன்" என விளக்கினார் சண்முகம்.

நிகழ்ச்சிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி தலைமைவகித்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறைத் தலைவர் ச. இராதாகிருட்டிணன் வரவேற்றார்.

– ச. இராதாகிருட்டிணன், மொழிபெயர்ப்புத்துறை

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"

முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம்

# அறிவியல் தமிழ்க் கருத்தரங்கு நூல் வெளியீட்டு விழா




தமிழ்ப் பல்கலைக்கழகமும் தமிழக அறிவியல் ஆசிரியர் மன்றமும், மயிலாடுதுறை மன்னம்பந்தல் ஏ.வி.சி.கல்லூரியும் இணைந்து மாநில அளவிலான அறிவியல் தமிழ் கருத்தரங்கையும் அறிவியல் தமிழ் நூல் வெளியீட்டையும் கல்லூரி வளாகத்தில் நடத்தின.

அறிவியல் தமிழ் நூல் தொடக்க விழாவிற்கு வந்திருந்த பேராளர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் கி.செம்பியன் வரவேற்றார். மயிலாடுதுறை சேம்பர் ஆப் காமர்ஸ் பொதுச் செயலாளர் எஸ்கொயர் எஸ்.ஏ.சாதிக் முன்னிலை வகித்தார். தமிழக அறிவியல் ஆசிரியர் மன்றத் தலைவரும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறைத் தலைவருமான பேராசிரியர் கு.அண்ணாத்துரை கருத்தரங்க அறிமுக உரையாற்றினார்.

80 ஆய்வாளர்களால் படைக்கப்பட்ட கட்டுரைகள் அடங்கிய அறிவியல் தமிழ் என்னும் நூலைத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றும்போது "அறிவியல் கலைச்சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் எண்ணற்றற அறிவியல் கலைச்சொற்கள் பரவிக்கிடக்கின்றன என்றும் அவற்றில் பெரும்பாலானவை கிராமப்புறங்களில் இன்றைக்கும் வழக்கில் உள்ளன என்றும் அவற்றை அனைத்துத் தரப்பினரும் வழக்கத்தில் நிலை நிறுத்தி அறிவியல் சிந்தனையை வளர்க்க வேண்டும்" என்றும் கூறினார்.


## தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்

### களஞ்சியங்கள்

- வாழ்வியற் களஞ்சியம் (13 தொகுதிகள்)
- அறிவியற் களஞ்சியம் (13 தொகுதிகள்)
- சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (3 தொகுதிகள்)
- A Concise Compendium of Cankam Literature (Vol. I & II)
- கோயிற்களஞ்சியம் (4 தொகுதிகள்)
- பெருஞ்சொல்லகராதி (4 தொகுதிகள்)

### இசையியல்

| | |
|---|---|
| புதிய இராகங்கள் | ரூ. 105/- |
| பஞ்சமரபில் இசைமரபு | ரூ. 30/- |
| சங்கரதாசு சுவாமிகளின் நாடகப்பாடல்கள் | ரூ. 30/- |
| புல்லாங்குழல்- ஓர் ஆய்வு | ரூ. 50/- |
| தமிழிசையியல் | ரூ. 90/- |

முந்நூற்றிற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக வெளியீடுகள்

தொடர்பிற்கு: இயக்குநர்(பொ), பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், அரண்மனை வளாகம், கீழராஜவீதி, தஞ்சாவூர் 613 001. ☎04362 - 239221.

## மெலட்டூர் ஞானாம்பாள் சுவாமிநாதன்
# அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறை சார்பில் மெலட்டூர் ஞானாம்பாள் சுவாமிநாதன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது.




தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் பேசும்போது, "அண்ணல் காந்தியடிகள் வாழ்வில் அரிச்சந்திரா நாடகம் ஏற்படுத்திய தாக்கம் நாம் அறிந்ததே. நாடக உலகில் புகழ்பெற்ற மதுரை விஸ்வநாததாஸ், விடுதலைப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தபோது கைது செய்யப்பட்டார். வள்ளி திருமணம் நாடகத்தில் வள்ளி, பறக்கின்ற பறவைகளை ஓட்டுவதாக அமைந்த பாடல், பரங்கியரை விரட்டுவதாக அமைக்கப்பட்டிருக்கும்.

அக்கால நாடகத்தில் நடித்தோர், திரைப்படங்களில் விடுதலைப் போராட்ட உணர்வை இலைமறை காய்மறையாக உணர்த்தியிருக்கின்றனர்.

நாடகம் அக எழுச்சியை வெளிக்காட்ட பயன்படும் அரிய உத்தி. நாடகக்கலையை முறையாகப் பயன்படுத்தியதால்தான் விடுதலை இயக்கம், பொதுவுடைமைஇயக்கம், பகுத்தறிவு இயக்கம் ஆகியவை வளர்ந்தன" என்றார்.

நிகழ்ச்சியில் 'தொன்ம(புராண) நாடக திரைப்படங்களில் விடுதலைத் தாக்கம்' என்ற தலைப்பில் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆர்.கே.அழகேசன் பேசும்போது, "நாடகப் பிதாமகன்கள் எனக் கூறப்படுவோர் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோர் ஆவர்" என்றார்.

"இந்தியா விடுதலை பெற அரசியல் தலைவர்கள், தியாகிகள் பங்கேற்ற போராட்டங்களுக்கு, நாடகம், திரைப்படம், பாடல்கள், வசனங்களும் உதவின.

அக்காலப் புராணப்படங்கள் சுதந்திர உணர்வை, நாட்டுப்பற்றைத் தயங்காமல் வெளிக்கொண்டு வந்தன" என்றார்.

நாடகத்துறைத் தலைவர் க.ரவீந்திரன் வரவேற்றார்.

ஆய்வாளர் வெங்கடரமணன் நன்றி கூறினார்.

-க.இரவீந்திரன், நாடகத்துறை

---

மே'04 இல்......

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. க.விஜயா, இசைத்துறை | இசையரங்கின் தோற்றமும் வளர்ச்சியும் | 14-05-2004 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2004-05ஆம் கல்வியாண்டில் நடைபெறும் வகுப்புகள்

### முனைவர் / ஆய்வியல்நிறைஞர் பட்டப்படிப்பு

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை
4. அரிய கையெழுத்துச் சுவடித்துறை
5. ஓலைச்சுவடித்துறை
6. கல்வெட்டியல்துறை
7. மொழிபெயர்ப்புத்துறை
8. அகராதியியல்துறை
9. சமூக அறிவியல்துறை
10. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
11. அயல்நாட்டுத்தமிழ்க் கல்வித்துறை
12. இலக்கியத்துறை
13. மொழியியல்துறை
14. தத்துவமையம்
15. நாட்டுப்புறவியல்துறை
16. இந்தியமொழிகள் பள்ளி
17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
18. சித்த மருத்துவத்துறை
19. தொல்லறிவியல்துறை
20. கட்டடக்கலைத்துறை

துறையிடை இணை ஆய்விற்கும் (Inter Disciplinary Research) வாய்ப்பு உண்டு.

**கல்வித் தகுதி :** முதுகலைப் பட்டப்படிப்பில் (Post Graduate) 55% மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். எஸ்.சி/எஸ்.டி. மாணவர்கள் 50% பெற்றிருந்தால் போதுமானது.

### முதுகலை(எம்.ஏ.,) முழுநேரம்:2 ஆண்டுகள்

| பாடம் | துறை |
|---|---|
| தமிழ் | இலக்கியத்துறை |
| பயன்பாட்டு மொழியியல் | மொழியியல்துறை |
| வரலாறு கலை மற்றும் பண்பாடு | சிற்பத்துறை |
| திருக்கோயில் நிருவாகம் சுற்றுலாவியல் மற்றும் தத்துவம் | தத்துவமையம் |
| வரலாறு மற்றும் தொல்லியல் | கல்வெட்டுத்துறை |
| நாட்டுப்புறவியலும் பண்பாடும் | நாட்டுப்புறவியல்துறை |
| இசை | இசைத்துறை |
| தமிழ்-பயன்பாட்டுத் தமிழியல் | வளர்தமிழ்ப்புலம் அகராதியியல்துறை |
| சமூக அறிவியல் | சமூக அறிவியல் துறை |
| தமிழ்-சுவடியியலும் பதிப்பு வரலாறும் | அரிய கையெழுத்துச் சுவடித்துறை |

**கல்வித் தகுதி :** பகுதி -I தமிழைப் பாடமாகப் பயின்று, ஏதாவது ஒரு இளநிலைப்பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

**இசை முதுகலை:** இளநிலைப்பட்டப் படிப்புடன் சங்கீத வித்துவான்/இசைக்கலைமணி/இசை மேல்நிலை/ஏழிசைமணி/இசைப்பள்ளிப்படிப்பு/இசையில் இளங்கலை இவற்றில் ஏதேனுமொன்றில் தேர்ச்சி.

### பெருஞ்சான்றிதழ் (Diploma) படிப்பு (காலம் : ஓராண்டு)

| பாடம் | தகுதி | துறை |
|---|---|---|
| நாடகப் படைப்பாக்கம் | இளநிலைப்பட்டம் | நாடகத்துறை |
| மொழிபெயர்ப்பியல் | முதுகலைப்பட்டம் | மொழிபெயர்ப்புத்துறை |
| அகராதியியல் | இளநிலைப்பட்டம் (பி.லிட்., புலவர் பட்டத்தேர்ச்சி) | அகராதியியல்துறை |
| சுவடியியல் | இளநிலைப்பட்டம் | அரியகையெழுத்துச்சுவடித்துறை |
| அச்சும் பதிப்பும் | இளநிலைப்பட்டம் | அரியகையெழுத்துச்சுவடித்துறை |

### சான்றிதழ் (Certificate) படிப்பு

| பாடம் | தகுதி | பயிற்றுவிக்கும் துறை | காலம் |
|---|---|---|---|
| இசை | 10ஆம் வகுப்பு - தேர்ச்சி | இசைத்துறை | ஓராண்டு |
| மருத்துவச் சுவடிகள் | இளநிலைப் பட்டம் | சித்தமருத்துவத்துறை | 6 மாதங்கள் |
| பதிப்பு முறைமை | | அரியகையெழுத்துச்சுவடித்துறை | |
| மூலிகை வளர்ப்பு முறைமை | 10ஆம் வகுப்பு - தேர்ச்சி | சித்தமருத்துவத்துறை | 3 மாதங்கள் |
| கணிப்பொறிப் பயன்பாடு | +2 தேர்ச்சி | கணிப்பொறி அறிவியல்துறை | 3 மாதங்கள் |
| இணையமொழிகள் | இளநிலைப்பட்டம் | கணிப்பொறி அறிவியல்துறை | 3 மாதங்கள் |
| தெலுங்கு | +2தேர்ச்சி | இந்திய மொழிகள் பள்ளி | 1 வருடம் |